III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE.

MCOP.72/2024

Deposition of witness for the Petitioner/PW2

Respondent solemnly by Thiru.P.Kothandaraman, Junior Assistant

in accordance with the provision of Act I for 1873 on 25-06-2025

| | | | |
|---|---|---|---|
| Name | : சுப்பிரமணியன் | Village | : |
| Father's Name | : துரைசாமி | Calling | : |
| Age | : | Taluk | : |

முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் நேரடியாக பார்த்த சாட்சி. நான் சொல்லக் கூடிய சங்கதிகளை சத்திய பிரமாணம் செய்து எழுத்து பூர்வமாக தாக்கல் செய்கிறேன். அதை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் கலவை கலக்கும் தொழில் செய்து வருகின்றேன். நான் சம்பவத்தன்று குமணன் சாவடியிலிருந்து மீன் மார்கெட் போய்விட்டு திரும்பி வந்து கொண்டிருந்தேன். சம்பவத்தின் போது தள்ளுவண்டியை கொண்டு சென்று கொண்டிருந்தவர் கையால் தள்ளிக்கொண்டு போனாரா அல்லது காலால் பெடல் செய்து போனாரா என்றால் பெடல் செய்து கொண்டு போனார். நான் ஆட்டோவில் சென்று கொண்டிருந்தேன். அவர் எனக்கு முன்னால் பெடல் செய்து கொண்டுபோனார். நான் இந்த விபத்து சம்பந்தமாக வேறு எங்காவது வாக்குமூலம் கொடுத்திருக்கிறேனா என்றால் போலிசாரிடம் கொடுத்திருக்கின்றேன். எனக்கு படிக்க தெரியாது. நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் என்ன விவரம் என்று தெரியாமல் கையெழுத்துப் போட்டேனா என்றால் கூட்டிப் படித்து பார்த்து கையெழுத்துப் போட்டேன். ஆனந்த தீர்த்த வித்தயாபேட்ட ரெசிடென்சி என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. பூந்தமல்லி மாதிரி வீடு சந்திப்பு சம்பவத்தின் போது எனது கோயம்பேட்டில் இருந்து பூந்தமல்லி வரும் சாலையின் இடது புறமாக இருந்தது. எனக்கு இடது புறமாக டிரை சைக்கிளை ஓட்டி சென்றார். சாட்சி தற்பொழுது எனக்கு முன்பாக வண்டியை ஓட்டி சென்றார் என்று கூறுகின்றார். நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லுகின்ற கண்டெய்னர் லாரியின் பதிவு

எண்.6148. கண்டெய்னர் லாரியின் முழுபதிவு எண் விவரமும் எனக்கு தெரியாது என்றால் நம்பர் மட்டும் எனக்கு தெரியும். கண்டெய்னர் லாரி வண்டியை இடித்த சத்தம் கேட்டுதான் நான் திரும்பிப் பார்த்தேன் என்றால் சரிதான். நான் விபத்தை நேராக பார்க்கவில்லை. சத்தம் கேட்டு தான் பார்த்தேன் என்றால் சரிதான். ஆட்டோவில் இருந்து இறங்கி ஓடிப்போய் பார்த்தேன். நான் விபத்தை நேரடியாக பார்க்காமல் மனுதாரர் உறவினர்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை :- இல்லை.